1973 டிசம்பர் 1]

அண்ணா பண்ணை ஈட்டியுள்ள லாபம்.

*557. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

1972-73ம் ஆண்டில், குடுமியாமலை அண்ணா விவசாயப் பண்ணையின் வருமானம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குடுமியாமலை அண்ணாப் பண்ணையில் 1972-73ம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 1,40,000 நிகர வருமானம் கிடைத்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : குடுமியாமலை அண்ணா பண்ணையில் விவசாயத்திற்குப் பயன்படவேண்டிய மொத்த ஏக்கர் நிலம் எவ்வளவு? இதுவரையில் விவசாயத்திற்கு பயன்பட்டு வருகிற நிலத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு? மீதி இருக்கிற இடங்களை எப்பொழுது விவசாயத்திற்குரிய நிலமாக பண்ணை மூலம் ஆக்கப்படுவதற்கு வேலை செய்யப்படுகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : குடுமியாமலை அண்ணா பண்ணையில் மொத்தம் ஏறத்தாழ 1,000 ஏக்கர் நிலம் விவசாயத்திற்கு வருவதற்கு உண்டு. எல்லாம் இன்னமும் விவசாயத்திற்கு வரவில்லை. அங்கு நடப்பது முக்கியமாக ஆராய்ச்சி என்பதை நண்பர் நினைவில் கொள்ள வேண்டும். ஏற்கனவே அங்கு ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் கூறும்பொழுது குடுமியாமலை அண்ணா விவசாயப் பண்ணையில் 1972–73-ல் ரூ. 1,40,000 வருமானம் என்று கூறினார்கள். அந்த வருமானம் வருவதற்கு அரசாங்கம் செய்துவருகிற செலவு என்ன? அதில் அதிகாரிகளுக்குக் கொடுக்கிற சம்பளங்களும் உட்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் கூறுகிறபொழுது நிகர வருமானம் என்று சொன்னேன். நிகர என்று சொன்னால் செலவு நீக்கி வருகிற வருமானம் அது. அதிலே பெரிய ஆபீசர்கள்

[1973 டிசம்பர் 1

தவிர, மற்ற எல்லா சிப்பந்திகளின் செலவும் அடங்கியிருக்கிறது. ஆக, இதெல்லாம் நீக்கி நிகர வருமானம் ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் இருப்பதற்கு ரூ. 1,40,000 பெரிய வருமானம் அல்ல.

திரு. சோ. அழகர்சாமி : குடுமியாமலை அண்ணா விவசாயப் பண்ணையில் 1,000 ஏக்கர் சாகுபடிக்கு இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே சாகுபடி செய்யப்படாத நிலமும் இருக்கிறது. அங்கே இப்பொழுது ஆராய்ச்சிக்கு மட்டும் சில பயிர்சிகள் நடைபெறுவதை விட்டுவிட்டு, விவசாயத்திற்கு இன்னும் அதிகமாக ஏக்கரா நிலத்தைக் கொண்டுவரக்கூடிய நிலைமையை உண்டாக்க முடியுமா ? மேலும், பொறுக்கு விதைகளை வேறு கம்பெனிகளில் வாங்கிக் கொடுப்பதால், அதுவும் குறிப்பாக A/3 கம்பை வாங்கிக் கொடுப்பதால் எங்கள் வட்டாரத்தில் ஏகப்பட்ட நஷ்டம் ஆகிவிடுகிறது என்று கூக்குரல் போடுகிறார்கள் விவசாயிகள். ஆகவே, அதையும் விசாரணை செய்து அம்மாதிரி விவசாயிகளுக்கு வேண்டிய விதைகளைத் தயார் பண்ணக்கூடிய செயலை அரசுத் துறையிலே செய்வதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கு ஒரு விதைப் பண்ணை இருக்கிறது. அந்த விதைப் பண்ணையில் நவீன இயந்திரங்களும் இருக்கின்றன. அங்கே தயார் செயயப்படுகின்ற விதைகள் முதல் தரமானவை, அக்ரோ மார்க் என்று சொல்லப் பட்ட மார்க் போடப்படுகிறது. அதற்கான சர்டிபிகேட் சர்டிஃபைட் ஸீட்ஸ் என்று சான்றிதழும் வழங்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் தண்ணீர் போதிய அளவு கிடைக்கிறதா ? கிடைத்தால் தண்ணீர் இரவைப் பயிர் சம்பந்தமாக ஆராய்ச்சியும், அதே சமயத்தில் மானாவாரியாக சாகுபடி செய்யக்கூடிய ஆராய்ச்சியும், சேர்த்து ஆராய்ச்சி நடத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கே தண்ணீர் போதுமான அளவு இருக்கிறது என்று நான் சொல்லமாட்டேன். குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலிருந்து வருகிற உறுப்பினர் அவர்கள் தண்ணீர் ஏராளமாகக் கிடைக்கக்கூடிய பகுதியிலிருந்து வருகிறார்கள், அதற்கும் குடுமியாமலை அண்ணா பண்ணைக்கும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. இரவை மூலம் தண்ணீர் கிடைக்கிறது. அதே சமயத்தில் நான் சொல்ல விரும்புவது,

1973 டிசம்பர் 1]

அங்கே பருப்பு வகைகள் 'பல்ஸஸ்' நல்ல முறையில் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. அதற்குப் போதிய அளவு தண்ணீர் கிடைக்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அண்ணா பண்ணையில் தற்பொழுது 1,000 ஏக்கர் நிலம்தான் இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். 1,000 ஏக்கரை கூடுதல் ஆக்கவேண்டும் என்ற திட்டம் இருந்ததே, அது எப்பொழுது செயல்படுத்தப்படும் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, நான் 1,000 ஏக்கர் பயிராகிவிட்டது என்று சொல்லவில்லை. தற்பொழுது பண்ணையில் 1,000 ஏக்கர் இருக்கிறது. பெரும் பகுதி பயிர் ஆகிறது. ஆயிரம் ஏக்கரும் பயிர் ஆனதற்குப் பிற்பாடு பண்ணையோடு சேர்ப்பதற்குத் தகுந்த நிலங்கள் இருக்கின்றன. அதை விரிவுபடுத்துவதற்கு அந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : அண்ணா பண்ணையில் விவசாய ஆராய்ச்சி நடைபெறுகிறபொழுது உரம் பற்றாக்குறை இருக்கிற இந்த நேரத்தில் பர்டிலைஸர்ஸ் குறைவாகக் கொடுத்தாலும் நல்ல முறையில் பயன்தரக்கூடிய அளவுக்குப் பயிர் வகைகள் போட்டுக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : அங்கேகூட குறைந்த அளவிலே உரத்தைக் கொடுத்து, அதிலே நல்ல பயிர் வருகிற அந்த ஆராய்ச்சி என்று தனியாக நடைபெறவில்லை. அந்த ஆராய்ச்சி வேறு பல பண்ணைகளில் நடைபெறுகிறது. உரத்திற்குப் பதிலாக பவுடர்—பாக்டீரியா, அதாவது நுண் பயிர் பவுடர், விதையிலே சேர்த்து விதைத்தால், காற்றிலிருக்கிற நைட்ரஜனையும் சேர்த்து பயிருக்கு உணவு ஊட்டும் இருக்கின்றன. அவை விவசாயிகளுக்குக் கொஞ்சம் கொடுக்கப்பட்டு வருகிறது. அதுகூட இந்தப் பண்ணையில் பரிட்சை செய்து பார்க்கப்பட்டது.

வேளாண் பணிக்கழகம்.

*558. **வினா—திரு. எம். சுரேந்திரன்** : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இம்மாநிலத்தில், 1972-ஆம் ஆண்டு, அக்டோபரிலிருந்து வேளாண்பணிக்கழகம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது உண்மையா?